(1889)

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | வு 1-க்கு | ரு 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரு 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரு 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.

விளம்பரங்கள் முற்பண மனுப்பினுலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—கஎ } யாழ்ப்பாணம்:— குரோதன வருஷ் புரட்டாதிமீ உஉ; (1925 செப்டெம்பர் 17) வியாழக்கிழமை { இலக்கம்—உஉ


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பாம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


தேசப்பெரியார்கள்
அநேகர் விரும்பி உபயோகிக்கும்
சமையல் அடுக்கு

## ருக்மணிகுக்கர்தான்.

கனம் எட்டியாபுரம், ராஜா, டாக்டர் வரதராஜுலுநாயுடு முதலிய அநேக கனவான்களால் நன்குமதிக்கப்பட்டுள்ளது. இதனுல் ஒருமணிக்குள் கஷ்டமில்லாமல் சாதம் 4, 5 பதார்த்த வகைகள் செய்யலாம்.

| அளவு | ஒருவர் | 2 | 4 | 6 | 8 பேர். |
|---|---|---|---|---|---|
| விலை | ரூபா 13. | 18 | 22 | 27 | 33. |

விபர புத்தகம் இனம். ஏஜண்டுகள் தேவை.
இன்றே ஒரு குக்கர் வாங்குங்கள்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயபுரம், மதராஸ்.
(Y. 45.)

## Hakeem, M. Mohamed Ebraheem & Co;
HAMEETHIA AYURVEDIC UNANI
MEDICAL HALL.
POTO-NOVO (South India)

அருமைத் துரைகளே! பொறுமையாய்க் கவனியுங்கள்!

இழந்துபோன பலத்தையும், நலத்தையும், நரம்புத் திடத்தையும் அதி அற்புத ஆச்சரியமான சுக சக்தியையும் இது உபயோகித்த ஒரே வேளையில் தெரிந்துகொள்ளலாம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிக் கடிதங்களும் தங்க மெடல்களும் பரிசு பெற்ற
மதன மோஹன

## சிட்டுக் குருவிச் சத்தின் லேகியம்.

அசல் பாகம்! ——o—— அருமையானது!!

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்தரவாதமுள்ளது இந்தப் பாகம் சரியாக வேறு எந்தக் கம்பெனியார்களும் செய்து காட்டினாலும் அல்லது இது நாங்கள் உண்மையான பாகப்பிரகாரம் சரியாக செய்யவில்லை என்று ருஜுவித்தாலும் சரியே அவர்களுக்கு எங்கள் கம்பெனியால் ரூபா 1000 இனும் கொடுக்கப்படும்.

### அன்பின் மிக்குள நண்ப சிகாமணிகளே!

அருமையும், அநுபவமும், பெருமையும், பிரபல்யமும், மஹா அற்புத ஆச்சரிய சக்திகளும் வாய்ந்த இந்த அசல் "முபற்ற" லேகியத்தை உபயோகிக்கும் உத்தமர்கள் இல்வாழ்க்கையிலே நாம் என்றுங் கண்டிராத சித்தானந்த கெம்பீர சிற்சாவிலாச நலன்களையும், சில அற்புத குணங்களையும் தெரிந்துகொள்வார்கள். ஆஹா! குணத்தால் சிறந்த இந்திரலோகத்திய "மகாசஞ்சீவினி" இதுதானோ? என்றும் பன்முறையும் புகழ்வார்கள். ஆனுல் பிறந்து இவ்வுலகத்தில் வளர்ந்து இளம் பால்யப் பருவத்திலேயே துர் நோய்வாய்ப்பட்டுக் கெட்டும், இனனும் பலவித காரணங்களினுலும் தேஹசித்திக்கு சத்தாரணமாகிய நல்லிரத்தத்தை வீண்விரயஞ்செய்தும், நல்ல வாலிபப் பருவத்தில் வாத பித்த சிலேற்பன மிகுதிக் குறைவாலும், எலும்புருக்கி முதலான வெப்புரோகங்களினுலும் ஜீவரத்ன பீடமாகிய தேகம் தளரப்பெற்றவர்களும், சித்திரபங்கம் என்னும் ஓர்வித கொடிய நோயினுல் எப்பொழுதுஞ் சஞ்சலப்பட்டுக்கொண்டிருப்பவர்களும், சுரம் பிரமேகம் விஷப்பாண்டு முதலிய வியாதிகளால் இரத்தம் கரைந்து சர்வ நரம்புகளுந் தளர்ந்து ஐம்புலன்களின் உற்சாகமும் குறைந்து, ஞாபகசக்திக் குறைவு, கை கால் அசதி, தேஹாசங்கை, இடுப்புவலி, பசிமந்தம், மலச்சிக்கல் முதலிய வியாதிகளால் சதா வருந்துவோரும்,

மேலும் தத்வ புத்திசாதுர்யத்தைக் கொண்டு வேலைசெய்யக்கூடிய லாயர்கள், குமாஸ்தாக்கள், பாடலீசர்களும், மற்றும் ஞாபகசக்தியால் வேலையையுடைய, எந்தத் தொழிலாளர்களும் இதனை உபயோகித்தால் நல்ல உற்சாகமும், சந்தோஷமும் அடைவார்கள். திடமான தேஹக் கட்டுப்பாட்டையும், புதிய மேனியையும், இரத்தவிர்த்தி ஞாபகவிர்த்தி சந்தானவிர்த்தி முதலிய சர்வ நலன்களையும் பெறுவார்கள். தாருட்யசக்தியின் குறைபாட்டினுல் ஏற்பட்ட பலவிதமான நோய்களினுலும், பீடிக்கப்பட்டு இரவும் பகலும் அதுவே கவலையிலானவர்களுக்கு திட்டமாக குணம் செய்வதில் இது மகா வல்லமையும் பேரும் பிரகீர்த்தியும் பெற்றது. இதனை பரிக்ஷிக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் தப்பாமல் குணஞ்செய்யும். சத்தியமான சித்தானந்த யோகபாகம் இதுதான் என்று நாம் சொல்லவேண்டியதில்லை. பலனும் நலனும் சில அற்புத ஆச்சரிய வல்லமெய்க் குணங்களும் ஒரே வேளையில் தெரியும், கண்டாலே தெரியும் சாக்ஷி! தின்றாலே தெரியும் திடன!! இத்தகைய குணங்கள் இதில் இல்லையென்று சத்தியமாகச் சொல்லுகிறவர்களுக்கு எமது கம்பெனியிலிருந்து ரூபா 1000 இனும் கொடுக்கப்படும். பரிக்ஷை செய்யவும். உபயோக விபரம் கூடவே வரும்.

அன்பர்களுக்கோர் அறிவிப்பு:—

இக்காலத்தில் சில போலி வைத்தியர்கள் கிளம்பி பலவித இழிவிடைதன் லேகியங்களையே சிட்டுக்குருவி லேகியமென்று விற்று வருகிறார்கள். ஆகையால் அத்தகைய லேகியங்களைத் தருவித்து மோசம்போய்விடாமல் நமது விலாசத்தைக் கவனித்து எழுதவேண்டியது. ஒரு முழுபாகம் தருவிப்பவர்களுக்கு உசித இரசமணி 1 இனும்.

| | | |
|---|---|---|
| | 40 நாள் மருந்து 16 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 10—0—0 |
| | 20 நாள் மருந்து 8 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 5—0—0 |
| பரிக்ஷைக்கு | 10 நாள் மருந்து 4 பலம் டப்பி 1-க்கு விலை ரூபா | 3—0—0 |

வி. பி. தபால்செலவு முதலியன முழு பாகத்திற்கு அணு 12ம், அரைபாகத்திற்கு அணு 7ம், கால்பாகத்திற்கு அணு 5ம் பிரத்தியேகம். மருந்தின் கிரயத்தை முன்பணமாக அனுப்புகிறவர்களுக்கு போஸ்டேஜ் சார்ஜ் இனும்.

விசேஷ கவனிப்பு:—பினங்கு, சிங்கப்பூர், குவாலாலம்பூர், செட்டால், மோரீஸ் முதலிய வெளிப்பிர தேசங்களில் உள்ளவர்கள் மருந்தின் கிரயமும், தபால் செலவு ரூபா 2ம் சேர்த்து முற்பணமாக மணியார்டர் அல்லது போஸ்டல் ஆர்டராக அனுப்பியே மருந்து பெறவேண்டும்.

நமது விலாசம்:—

ஹக்கீம், எம். முஹம்மது இபுறுஹீம் அண்ட் கம்பெனி,
மானேஜர், ஏ. முகம்மது யூசுபு,
ஹமீதியா ஆயுர்வேத யூனானி வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை (தென்னிந்தியா).
(Q 63).

25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஒளஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

நமது ஜீ. எ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை" ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனமாய் (1) அனுப்பப்படும்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.

### ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.

அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை ஒரு முறை பரீக்ஷை பாருங்கள்.

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் சிறந்தது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையித் பரீக்ஷை பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20-பில்ஸ் ரூ. 2-0-0 வி. பி. சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு யாதிலும் குணபடவில்லை. தங்கள் ஜீ. எ. மாத்திரையைச் சாப்பிட்டு பூர்ண சுகம் வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி யருந்தி தேகத்தை தப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமெனபதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்டி கொடுக்கப்படும்).

## பிரமேக நிவாரணி

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், தத்து உடனே தீர்க்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் கு, மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

## புஷ்பிக ரோஸ் பற்பொடி.

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, எகிறுவீக்கம், [illegible] தீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாகெட் 1-க்கு ரூபா 2-0-0 வியாபாரிகளுக்கு 6 டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல் தலைக்குவ தற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேணுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

### கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலபந்தம், சீரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப நோய் சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2.

### மாந்திரீக ரட்சை.

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீக்கும் ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2 ம் சேர்த்து முற்பணம் அனுப்பினுல் மாத்திரம் மருந்து அனுப்பப்படும்.

வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.
(Q 56. B.)

## ஒரு சாதாரணபொருளே.

நோவுக்கானைதைலந்தின் சுகந்தமதேடமாட்டார். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்கும் குணம் மறைந்துவிடுகிறது.

### லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம். அதனுல் அது உடனே கீல்வாயு, துடைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு முதலிய நோவுகளை திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—1—25.




(Y. 41. B.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன இல
புரட்டாதி ௨௨ வியாழக்கிழமை

## பசு வளர்த்தல் கஷ்டமாக விருக்கின்றது.

'வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" என்று பெரியோர் கூறியிருக்கின்றனர். பிராமணர்களும் தேவர்களும் பசுக்களும் நன்கு வாழ்தல்வேண்டும் என்பது இதன் கருத்து. யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்க எல்லைக்குள்வசிப்பவர்கள்பலர் தங்கள்வீட்டிலே பல பசுக்களேனும் ஒரு பசுவேனும் வைத்து வளர்த்துக்கொண்டுவந்தார்கள். இப்பசுக்கள் குழந்தைகட்காய பாலைப் பெரிதுந் தருவனவாம். சைவசமயத்தவர்களா யுள்ளவரின் வீட்டிலே பசு ஒன்றேனும் ஆவசியகம் நிற்றல்வேண்டும். பஞ்சகௌவியத்தைத் தருவதற்கும் வீடு மெழுதற்கும் உண்டபின் உண்டவிடத்துள்ள உச்சிட்டத்தை மாற்றுதற்குச் சாணத்தைத் தருவதற்குமாகப் பசு ஆவசியகம் வேண்டும் யாழ்ப்பாணப் பட்டினத்திலே பசு வளர்த்தல் இக்காலத்தில் மிகவுங் கஷ்டமாய் வந்துவிட்டது. பசுவிற்குரிய வைக்கோல் புல் முதலியன மிகவும் விலையேறிக்கொண்டன. பசுக்கள் போய் மேய்வதற்குத் தகுந்த புற்றரை யாழ்ப்பாணப் பட்டினத்திலே யில்லை முற்றவெளியிலுள்ள பசும்புற்றரையிலே சிலகாலத்திற்கு மாத்திரம் சில பசுக்கள் சென்று மேய்தல் கூடும். சில வருடங்களுக்கு முன்னர் பறைச்சேரிவயல் முதலிய இடங்களில் பயிரில்லாத காலங்களிலே இங்குள்ளார் பசுக்களைக் கொண்டுபோய் மேய்த்துவந்தனர். ஆனால் இப்பொழுது பட்டின பரிபாலன சங்கத்தார் விதித்த பிரமாணப்படி பசுக்கள் வெளியே புறப்படுதல் முடியாதாயிருக்கின்றது. சில ஏழைகள் தங்கள் பசுக்களை ஒரு நீண்ட கயிற்றிலே தொடுத்துத் தெருவோரத்தே கான்களிலுள்ள புல்லை மேயும்படி கொண்டுபோய் விடுத்துக் கைக்கொடியில் மேய்ப்பது வழக்கம். ஆனால் இப்பொழுது தெருக்கான்களிலுள்ள புல்லையும் பட்டினபரிபாலன சங்கத்தார் குத்தகைக்கு விற்றுவிட்டார்களோ அறியலானோம். இது உண்மையாயின் இவர்கள் செயல் பெரிதும் பரிதாபப்படத்தக்கதாம்.

கைதவறி ஒரு பசுமாடு புறப்பட்டுத் தெருவீதிவழியே சென்றுவிட்டால், மாடுபிடிப்பதற்கென்று கங்கணங் கட்டி நிற்கும் இரக்கமற்றவர்களிடத்தில் அந்த மாடு அகப்படுவது நிச்சயம். அப்பசு இளங்கன்றை யுடையதாகவிருந்தாலும், பால்சுரந்து தாய்ப்பசு வருந்தினாலும், பாலின்றிச் சிறுகன்று நாவுலர்ந்து தவித்தாலும் இம்மாடுபிடிப்பவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாது உடனே கொண்டுபோய் அப்பசுவைப் பொலிஸ்தானத்திற் கட்டிவிடுவார்கள். அங்கே அப்பசுவைச் சொந்தக்காரர் வந்து அவிழ்த்துச் செல்லும் வரைக்கும் திருவன் குதிரை வளர்த்தபிரகாரமே புல் தண்ணீர் அப்பசுவிற்குப் போடுவார்கள். பசுவுடையவர் முதற்றினம் ஒரு ரூபா நாற்பதுசதம் பசுவின் தீனின் பொருட்டும் பிற செலவின்பொருட்டும் கொடுத்தல் வேண்டும். அடுத்த ஒவ்வொரு தினத்திற்கும் நாற்பதுசத விகிதம் கொடுத்தல்வேண்டும். இதனோடு அமையாது ஒருவருக்கு இரண்டு தண்டனையென்றபடி பசுவுடையவர்மீது வழக்குத் தொடர்ந்து ஐந்துரூபாவிற்குக் குறையாத அபராதமும் விதிக்கப்படுகின்றது. அதிகாரிகள் செய்யும் இச்செயலினாலே தாய்ப்பாலில்லாக் குழந்தைகளின் பொருட்டுப் பசுவைத்து வளர்ப்பவர்களும், பசு வளர்த்துப் பால் கறந்து விற்றுச் சீவனஞ் செய்யும் ஏழைப் பெண்களும் பெரிது வருந்துகின்றார்கள் குழந்தைகள் பொருட்டு 'நேசில்'ஆகாரமும் 'மோர்ட்டன்'பாலும் தகரப் பாலும் வாங்கிக் கொடுப்பதற்கு இங்குள்ள ஏழைகளால் முடியாது பசுவை வளர்த்துப் பாலில் ஒரு பாகத்தைத் தங்கள் சவலைக் குழந்தைகட்குப் பருக்கி எஞ்சியதை விற்றும் சாணத்தை விற்றும் அப்பசுவை ஒருவாறு பராமரித்து வருகின்றவர்களுக்கு அதிகாரிகள் இடையிடையே விதிக்கும் இந்த அபராதம் பொறுக்கத்தக்கதன்று.

முற்காலத்திலே பசுக்கள் சென்று மேய்தற்குத் தக்க புற்றரைகள் இவ்வண்ணார்பண்ணையில் இருந்தனவென்றும் அவைகளை இப்பொ

யாழ்ப்பாண ப்பட்டின பரிபாலன சங்கம்.
பட்டின பரிபாலன சங்கத்தின்
எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக
ஸ்ரீ. மு. தாமோதரம்பிள்ளை
(மாமாத்தம்பி)யைத்
தயவுசெய்து
தெரிவு செய்யுங்கள்.
(Q. 66)

முது அரசினர் ஊரவர்களுக்கு முடிக்குரிய காணியென விற்றுவிட்டனரென்றும் இங்குள்ள முதியோர் சொல்லுகின்றனர் நமது அரசினரும், இப்பொழுது இப்பட்டினத்தின் பொறுப்பை வகித்திருக்கும் பட்டினபரிபாலன சங்கத்தாரும் இதனைப்பற்றிச் சிறிது சிந்திக்கவேண்டும். சனங்கள் கஷ்டமின்றி வாழ்தற்கான வசதிகளை, பரிபாலனப் பொறுப்பை ஏற்றுள்ள இவ்விரு பகுதியாரும் இயன்றவரையிற் செய்தல்வேண்டும். பட்டினத்திற்குச் சமீபமாக இடையிடையே பசும் புற்றரைகளை வகுத்து அங்கே பசுக்கள் போய் மேய்தற்கான வசதிகளைச் செய்தல் வேண்டும். பசுக்களை வேணுமென்று அவிழ்த்துத் தெருவழியே விடுபவர் அரிதினுமரிதாவர். பெரும்பான்மையும் சொந்தக்காரரை யறியாமலே சில பசுக்கள் கயிற்றை அறுத்துக்கொண்டும், கட்டிய கயிறு அவிழ்ந்துவிடத் தாமாகப் புறப்பட்டும் தெருவீதிக்கு வந்துவிடுகின்றன. அதன்பொருட்டு இத்துணைப் பெரும் அபராதம் விதித்தல் தருமமாகாது. தாம் அவிழ்த்துக்கொண்டு, இன்றேல் அறுத்துக்கொண்டு தெருவழியே போனால் தங்கள் கன்றுகள் பட்டினி கிடக்கவேண்டி நேரிடும், தாங்கள் சிறை கிடக்கவேண்டி நேரிடும், தங்களைப் பராமரிப்போர் அபராதம் இறுக்கவேண்டி நேரிடும் என அறிந்திருந்தால் இந்த மாடுகள் ஒருபோதும் வெளியே புறப்பட்டுப் போகமாட்டா.

பட்டின பரிபாலன சங்கத்தார் இவைகளைச் சிறிதும் சிந்திக்கின்றார்களில்லையே. இதுவரையில் ஊரவர்களுக்கு இச்சங்கத்தார் செய்த நன்மை யென்னவென்பதை உண்மையாக அறிய விரும்புகின்றேம்.

## சேரமான்பெருமாணயனார் தம்பிரான் றோழரைச் சேவித்தல்.

*எமது சமயகுரவராகிய சுந்தரமூர்த்திநாயனார் திருப்புக்கொளியூரவிநாசி என்னும் சிவஸ்தலத்திலே முதலைவாய்ப் பிள்ளையை மீட்ட சமாசாரம் உலகெங்கும் பரவியது. அதன்பின் நாயனார் தமது ஆப்த நண்பராகிய சேரமான்பெருமாணயனாரைக் காணவேண்டுமென்னும் பெருவிருப்பினால் மலைநாட்டை அடைந்தார். சேரநாட் டெல்லைப்புறத்திலுள்ள சிவனடியார்கள் தம்பிரான்றோழருடைய வரவைக் கண்டு தங்கள் அரசர்பால் விரைந்து சென்று "மகாராசாவே! எங்கள் குருநாதராகிய சுந்தரமூர்த்திநாயனார் திருப்புக்கொளியூரிலே முதலைவாய்ப் பிள்ளையை மீட்டு, இங்கெழுந்தருளி வருகின்றார்" என்று தெரிவித்தார்கள். இச்சோபன சமாசாரத்தைக் கூறிய அடியார்களுக்குச் சேரர்பிரான் அளவில்லாத திரவியங்களையும் இரத்தினாபரணங்களையும் உபகரித்தனர். கழறிற்றறிவார்நாயனார் தம்பிரான் றோழர் அங்கெழுந்தருளுஞ் சமாசாரத்தைத் தமது நாடெங்கும் பிரசித்தப்படுத்தினார் அவரது ஆணைப்படி நகரத்துள்ள வீதிகள் வாழை கமுகு முதலியவற்றாலுந் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டன. அழகிய சிகரங்களையுடைய வாயில்தோறும் பூரணகும்பங்கள் வைக்கப்பட்டிருந்தன. சிறுவன் முதலைவாய்ப்பட்டிறந்து பலநாளானபின் அவனை உயிர்பெற்றெழச்செய்த மகத்துவமுடையர் எமது சமயாசாரியராதலினால், உலகம் இந்த அற்புதத்தை அறிந்து அந்நிய சமயப் பகுதியிற்படாது "சைவசமயமே சமயம்" எனத் தேர்ந்து உய்ந்து கடைத்தேறும் என்னும் பெரு விருப்பினாலும் சேரமான் பெருமாணயனாருக்கு முன்னொருபோது மில்லாத பெருமகிழ்ச்சி உண்டாயதாம்.*

*சேரர்பிரான் எமது சமயகுரவரைச் சகல வரிசைகளுடன் சென்று எதிர்கொண்டு அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். இருவரும் ஒருவரையொருவர் கட்டித்தழுவிச் சில நாட்களாகப் பிரிந்திருந்த துயரம் நீங்கினர். பின்னர் எமது சமயகுரவரை யானைமீது எழுந்தருளச் செய்து சேரர்பிரான் அவர் பின்னின்று அழகிய குடையை அவருக்குப் பிடித்துச் சென்றார். ("தொண்டர் தம்பெருமை பேசவும் பெரிதே" என்றனர் ஆன்றோர். முன்னொருகால் சௌனகமுனிவர் மெய்யடியாரொருவரால் தமக்கு நேர்ந்த சாபத்தை நீக்கும்பொருட்டுப் பிரணவ சொரூபராகிய விநாயகப்பெருமானை நோக்கி அருந்தவம் புரிந்தார். பெருமான் அவர்முன் பிரசன்னராகி "நமது சாபம் நம்மருளினால் நீங்கினும் அன்பர், தமது சாபம் நீங்காது காண் சௌனகமுனிவ" என அருளிச்செய்தமையினாலும் பிறவற்றாலும் அடியார் பெருமை இத்துணைத்தென அளவுபடுத்திக் கூறுதல் கூடாதாகும். இந்நாயனார் எமது சமயகுரவருக்கு ஆப்தநண்பராகவிருந்தும், அவருக்குத் தோழராம் பெருமைபெற்றும், பின்னை ஓதுங்கின்று குடைபிடித்தல்தமது பெருங்கடனென்றும, அங்ஙனஞ் செய்வதாற் ஜநநசாகரத்தைக் கடந்து ஈடேறலாமென்றும் மனதிற்கொண்டாரென்பதாம். அடியார் பெருமையும் திருத்தொண்டின் மகிமையும் இத்தன்மைத்தாகவிருடப இக்காலத்தில் நம்மவருட் பெரும்பாலார் ஆலயங்களிற்றானும் குடைபிடித்தல் சாமரம் இரட்டல் தீபதிபந் தாங்குதல் முதலான சற்கருமங்களைச் செய்வதற்குக் கூசுகின்றனர்; அருவருக்கின்றனர்; தங்கள் கௌரவத்துக்குக் குறைவென மதிக்கின்றனர்; இவைகள் கூலியாட்கள் செய்யவேண்டிய கீழான கருமமென நினைக்கின்றனர். இக்காலத்துள்ள நவீன குருசீட முறைகளும் விபரீதக் கல்வியும் பிறவுமே ஈடேற்றத்துக்கு அப்பாலான தொரிந்தவல்ல இத்திருத்தொண்டுகளையெல்லாம் இவ்வளவு சனஸ்திதிப்படுத்தின. இவை அக்காலத்துள்ள பெருமதிபமைப பின்னரு மடையவேண்டு மேல் பெரியோர் என்ற வகுப்பில் வைத்தெண்ணப்படும் ஒவ்வொருவரும் மேலே சொல்லப்பட்ட திருத்தொண்டுகளைத் தாமேபுரிந்து, கூசுகின்ற-அருவருக்கின்ற-கௌரவக்குறைவென மதிக்கின்ற-கீழான கருமமெனக் கருதுகின்ற அவ்வகுப்பினருக்கு முன்மாதிரி காட்டுதல்வேண்டும். இங்ஙனஞ் செய்யப்பெறின் எமது சைவசமயம் விருத்தியெய்தும். நாமும் கடைத்தேறுவோமென்பதாம.)*

*சேரமான்பெருமாணயனார் எமதுசமயாசாரியரைத் தமது மாளிகைக்கு அழைத்துச்சென்று இரத்தின பீடத்தில் வீற்றிருக்கச் செய்தார்; அன்றலர் மலர்கொண்டு அவரது உபய திருவடிகளை அருச்சித்து வணங்கினார். தம்பிரான்றோழரும் அவரது பேரன்பிற்குரியராகி அங்குச் சிலகாலம் வீற்றிருப்பாராயினர். அக்காட்களில் சுந்தரமூர்த்திநாயனார் சேரநாட்டிலுள்ள சிவஸ்தலங்கள் பலவற்றையும் தமது தோழருடன் சென்று தரிசித்து ஈற்றில் மகோதை யென்னும் நகரத்தை அடைந்தாரென்பதாம்.*

## வீண் பிராந்தி.

குருநாக்கலிலே சில மந்திரவாதிகள் திரவியமெடுத்தற்குப் பலிகொடுப்பதற்காகச் சிறுபிள்ளைகளை மயக்கிக் கொண்டுபோக முயன்றார்கள் எனக் குற்றஞ் சாட்டப்பட்டு ஈற்றில் விடுதலையடைந்தார்களெனக் கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில தினசரிப் பத்திரிகைகளிலுள்ள புதினத்தை இற்றைக்குச் சில தினங்கட்கு முன்னர் மொழி பெயர்த்து இப் பத்திரிகையில் வெளியிட்டிருந்தேம். அதனை உள்ளபடியறியாத சில கல்வியறிவில்லாத பெற்றார்கள் இந்தச் சம்பவம் யாழ்ப்பாணத்தில் நடந்ததெனக் கேட்டார் வாய்க் கேட்டு வீண் பிராந்தி கொண்டு தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாதொழிந்தனரென அறியலானேம். யாழ்ப்பாணத்திலே அப்படியொன்றும் நிகழவுமில்லை; நிகழப்போவதுமில்லை. ஆதலினாலே பெற்றார்கள் தாங்கள் யாதும் காரணமின்றிக்கொண்ட வீண் பிராந்தியை விடுத்துத் தங்கள் குழந்தைகளைக் கிரமமாகப் பள்ளிக்கூடங்கட்கு அனுப்புவார்களாக.

## உலகம் பலவிதம்

*சென்ற ஆறுமாசங்களாக மழை பெய்யவில்லையே, விதைத்தமைதாலும் இல்லைமையினால் வேளாண்மை செய்தலும் முடியாமலிருக்கின்றதேயென வருந்தும் யாழ்ப்பாணத்திலே நாட்டுப்புறத்து வசிக்குஞ் சில கமக்காரர் ஒருங்கு சேர்ந்து மழைக்குக் காரணமாக உள்ளவரும் மேகவாகனருமாகிய இந்திரனைக் குறித்து வேள்விசெய்தார்கள். அப்பொழுது இந்திரன் அங்கு நின்ற ஒரு விருத்தன்மீது உருப்பட்டுப் பின்வருமாறு சொல்லுகின்றான்: "ஏ, சனங்களே, உங்கள் நாட்டிலே தானதருமங்கள் குன்றலாயின. நான்கு வருணத்தாரும் தத்தம் வருணாச்சிரதருமத்தினின்றுந் திறம்பலாயினர். முதல் வருணத்தவர்களாகிய பிராமணர்கள் தங்களுக்குரிய அறுதொழில்களாகிய வேதமோதுதல் ஓதுவித்தல் யாகஞ்செய்தல் செய்வித்தல் ஈதல் ஏற்றல் என்று சொல்லப்படுகின்ற இவற்றுள் இறுதியிலுள்ள ஏற்றல் எனப்படுந் தொழில் ஒன்றை மாத்திரஞ் செய்கின்றார்களன்றி ஏனைய ஐந்தினையும் கைவிடுத்தனர். எத்தனையோ பிராமணர்கள் "மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான், பிறப்பு ஒழுக்கங் குன்றக் கெடும்" என்றபடி தங்கள் ஆசார அனுஷ்டானங்களைக் கைவிடுத்துப் பதிதரானார்கள். இன்னுமெத்தனையோ பிராமணர்கள் தாம் செய்ய வேண்டிய ஆன்மார்த்த பரார்த்த பூசைகளுள் ஆன்மார்த்தத்தை விடுத்துப் பரார்த்த பூசையை மாத்திரம் சிரத்தையோடு செய்வதின்றிக் கூலிக்கு மர்படிப் பார்போற் செய்கின்றார்கள். வேறு எத்தனையோ பிராமணர் தமிழ் சம்ஸ்கிருதம் என்னும் இரு பாஷைகளையும் படித்தலை விடுத்து ஆங்கிலத்திலேயே வித்தியாசம் பஞ் செய்யப்பெற்றவர்களாய் அப்பாஷையையும் பின்னர் "லத்தின்" பாஷையையும் பயின்று இவ்விரு பாஷைகளினும் ஒருவாறு சித்தியடைந்து உத்தியோகம் பார்க்கத் தலைப்பட்டுத் தங்கள் குடுமியைக் கத்தரித்துவிட்டு, சட்டையிட்டு உபவீதத்தை மறைத்துக்கொண்டு சப்பாத்துந் தொப்பி யென்னு மிவைகளை யணிந்துகொண்டு 'நீறில்லா நெற்றிபாழ்" என்பதையுஞ் சிந்தியாது விபூதி தரித்தலை விடுத்து மூத்தவளை முகத்திற் குடியிருத்திக்கொண்டு, தங்கள் நாமத்தின் இறுதியிலேயுள்ள "ஐயர்" "சர்மா" என்ற சாதிக்குரிய சொற்களைத் தவிர்த்துக் கைச்சாத்திட்டுக்கொண்டு இந்தியாவிலுள்ள சில உத்தியோகப்பிராமணர்களைப் போல உத்தியோகம் பார்க்கத் தலைப்பட்டுக்கொண்டனர். இவர்கள் தங்கள் உடையை மாற்றியவாறே உணவையும் மாற்றிக்கொண்டார்கள். மற்றுஞ் சில மறையவர் தமக்கு விதிக்கப்பட்டதற்கு மாறாகக் கடுவட்டிக்குப் பணங் கொடுக்கின்றார்கள் வேதியருட் சிலரினுஞ் சிலரே தத்தம் வருணாச்சிர தருமத்தின்படி ஒருவாறு ஒழுகிவருகின்றார்கள். இப்படியெல்லாமிருப்ப மழை எவ்வாறு பெய்யும்" என்று சொல்லி அத்தத் தெய்வம் பின்னரும் சொல்லுகிறது.*

* * *

*"இனி இரண்டாவதாகவுள்ள அரசரின் செயலைப்பார்த்தால் அரசர்களுடைய வசதிக்காகப் பிரசைகள் இருக்கவேண்டியவர்களேயன்றிப் பிரசைகளின் வசதிக்காக அரசர்களிருப்பதாகக் காணப்படவில்லை. பஞ்சம்வந்த காலத்திலும் பிரசைகள் தாந்தாம் இறுக்கவேண்டிய வரிப் பணத்தை இறுத்தே தீருகின்றார்கள் பஞ்சகாலத்திலே உணவுக்குரிய மார்க்கத்தை அரசினர் பிரசைகளுக்குக் காட்டிவிடுகிறார்களில்லை, அவர்கள் தங்கீழுள்ள உத்தியோகத்தர்கட்குமாத்திரம் வேதனத்தை உயர்த்திவிடுகின்றார்கள். அதனால் எத்துணைப் பெரும் பஞ்சம் வந்தாலும் உத்தியோகம் பார்க்கின்றவனுக்கு அச்சமில்லை. ஊரில் வசிக்கின்ற கமக்காரன் தொழிலாளர் ஆகிய இவர்களே செய்வதின்னதென வறியாது திகைக்கின்றார்கள். கைத்தொழில் கமத்தொழில்களைப் பிரசைகள் செய்து வாழ்வதற்கு அரசினரும் தம் பிரசைகளாயுள்ளார்க்குப் பெருந் துணைபுரிதல்வேண்டும்."*

* * *

*"வணிகரெனப்படும் வியாபாரிமாரின் செயலைச் சிந்திக்குமிடத்தில் அவர்கள் இக்காலத்திலே தங்கள் வியாபார முறையை வழுவவிட்டுவிட்டார்கள். வெந்தவீட்டிலே பிடுங்கியதுதியென்றபடி, கொண்ட முதலிற் சிறிது இலாபம் வைத்து விற்றலின்றித் தத்தம் ஆசைக்கேற்ப இலாபம் வைத்து விற்கத் தலைப்பட்டுக்கொண்டனர். எத்தனையோ ஏழைகள் உண்ணாமல் உடுக்காமல் லோபஞ்செய்து ஈட்டிய பணத்தை நம்பிக்கையின் பொருட்டு அடைக்கலமாகக் கொடுக்க, வியாபாரிமா*

(ஐந்தாம் பக்கம் பார்க்க.)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

றாத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

க. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## அடைவுதகைவிற்பனவு விளம்பரம்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின்படி இச்சென்னெபெற்ற அடைவுபிடிக்கும் யாழ்ப்பாணம் வண்ணிறக்கு ஞர. வீ. அ. சி. முத்தவிருப்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டீ. சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924ஆம் ஐநுவரி.

| இல. | திக. | ரூ. ச. | ஊர். பெயர். நகைகளின் விபரம். |
|---|---|---|---|
| 3369 | 26 | 50 | வண்கிழக்கு சுப்பையா சின்னராசா பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| | | | ஆகஸ்ட்டு. |
| 3378 | 3 | 50 | ஆனைக்கோட்டை சரவணமுத்து நாகலிங்கம் திருகில்லாத பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 3380 | 3 | 40 | கொட்டடி ஆறுமுகம் நாகமணி சுரையில்லாத பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 3392 | 11 | 120 | காலடி சின்னத்தம்பி செல்லத்துரை முகப்பில் கல்வைத்த பொன்கொடிப் பட்டணம் காப்புச்சோடி 1 |
| 3414 | 16 | 80 | கொழும்புத்துறை கதிரித்தம்பி திருஞானசம்மந்தர் பொன் சங்கிலிக்கொடி 1 |
| 2415 | 17 | 82 | வண்மூக்கு க. சின்னத்தம்பி சிசலலிங்கம் பொன் சங்கிலி அட்டியல் 2 வெள்ளி பாதசரம் சோடி 1 |
| 3452 | 26 | 20 | ஆனைக்கோட்டை ஆறுமுகம் பொன்னையா திருகில்லா பொன் கை தடை குதிரைப்பவுன் 1 |
| | | | செப்டெம்பர். |
| 3491 | 8 | 50 | மானிப்பாய் கணபதிப்பிள்ளை செல்லத்துரை பொன் பட்டணக் காப்புச்சோடி 1 |

விற்பனவு:—இசோதனை(ஞாயிறு) புரட்டாதிமீ 4உ (19-9-25) சனிக்கிழமை காலை 10மணியளவில் டீ கடையில் எடுபட்ட நகைகளை பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

சு. செல்லையா உடையார்
வெத்திவேலன்ர்.

(Mis 710)

## விளம்பரம்.

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் அப்புரவாக வேலை செய்த முருக குத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக்கொடி, கால் தண்டை, செயின்கொஅசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடையம், ஒட்டியாணம், மோதிரம், புதுச் செப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கம்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கியஜாபிதா அனுப்புகிறோம்.

கா. பிளே சேட்டி அன் கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

அநேக பரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ்அண்டு மருந்துக்கண்காக்ஷியில் பஸ்பங்களுக்கு(முதல்தர)தேவநாஎஷதங்கபௌனத்தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும் பெற்றது

உலகம் புகழ்வது




உள்ள நாளும் மறவாதது

பழனி, சி. எம். சாமி

# மகாவீரிய தங்கபஸ்பம்.

பரிசைக்ஷக்கும் பலனுக்கும் உத்தரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகல வியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்த விர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது ஒருமுறை பரிசுதித்தால் உள்ளளவும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபாரசக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையுங் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதையும் திரும்ப உண்டாக்குகிறது. மேகவியாதிகள், பவுத்திரம், மூலம், க்ஷீணம், க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம் சூலை முதலிய சகல கர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1 மண்டலம் 48 நாள் பஸ்பம் ரூபா 20, அரை மண்டலம் 24 நாள் பஸ்பம் ரூபா 10.

பழனி, சி. எம். சாமி உத்தரவாதம் **குருபஸ்பம்** க்ஷய,காசரோக சஞ்சீவி உள்ளது.

இப்பஸ்பம் சமது குரு பெரிய மகானவர்களால் உபதேசிக்கப்பட்டது. இவ்வியாதிக்சென்றே தயார்செய்தது. க்ஷயம், காசம், சளி, இளைப்பு, இருமல், சுவாசம் இவைகளைக் குணப்படுத்தி நல்ல பசி, ரத்தவிர்த்தி, பலம், சரீர இடை இவைகளைக் கொடுத்துப் பூரணசுகத்தைத்தரும்.

நாற்பதுநாள் மருந்து ரூ 40. இருபதுநாள் மருந்து ரூ 20. பத்துநாள் மருந்து ரூ 10.

## குருநாகபஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்பிரேஷன் அவசியமில்லை. முளை தானே கரையும். சீழ் மூலம், இரத்த மூலம், குத்தல், மூல முளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாதமுள்ள சிறந்த ஔஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், சுட்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு கடினப்பட்டதாயிருந்தாலும் சரி 8 வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

## கெர்ப்ப எண்ணெய்.

இது ஸ்திரீகள் சம்பந்தமானவை. மாதாந்திர வயிற்றுவலியை உடனே தீர்க்கும். சரியாய்ப் பரிஷ்டையாகும். செர்ப்பாசயம், இளைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும்நீங்கி கெர்ப்ப முண்டாகும் மிக்க அனுபவமானது. புட்டி ஒன்று விலை ரூபா 2.

## மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், கிணத்தம்பரகசித்தி, தனலாபம், புத்திர சந்தானம், தெய்வ தரிசன உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி, முதலியன நீங்கும். சத்து 1க்கு ரூபா 2 6 சத்து ரூ 10.

## ரோம சம்ஹாரி.

ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். சரியானது. தோல் கெடாது. புட்டி 1க்கு அணா 8

## சர்வபடை நிவாரணி.

சகல மேகப்படை, சொறி, பூச்சிக்கடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள் ஒரேநாளில் உதிர்த்துவிடும். உடனே அரிப்பு நீங்கும். தோல் கெடாது. புட்டி 1-க்கு அணா 8.

## பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், நீர்மேகம், மற்றும் மேகரோகங்கள், நீர்க்கடுப்பு, எரிச்சல், இந்த உடனே நீக்கும். நிச்சயமாய் 3 வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு ரூபா 2.

வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
**C. மலையப்பசாமிப்பிள்ளை,**
நித்தியானந்த மெடிக்கல் ஹால்,
பழனி.

(Q. 64 B)

### தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற நிறமான தேக்க மரங்கள், நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையுமுள்ளன, சுமம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி முள்ளன. வேண்டிய மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வாங்கவிரும்புவோர்கள் தாமதம் இன்றி வந்து செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டைமானாறு,

தந்திவிலாசம்
ரு பி. வல்வெட்டித்துறை. (H. 37.)

### ஓ "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.

நாட்பட உழைக்கக்கூடியது.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

ருயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்,
(H. 40.) S. இந்தியா.

### சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் நெய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாணாபுச்சேரைப் புடவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுண்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லிஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,

தந்தி விலாசம்: வேணுகோபால், சேலம். | குகை, சேலம், S. I.

(H. 32)

### இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் கெ. 2-ம் கெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுத்த முருகுத்தி கெங்காதரக்கொடி கைக்கோர்வை, முகப்புக்கொடி, காஞ்சிஅரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணம், இவைபோன்ற செப்புக் கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளிக்க நகைகளும் பட்டுப்பருத்திமுதலிய ஜவுளித்தினுசுகளும் விலைகள் சரசம். விலாசம் தெரிவித்தால் பிறைஸ்லிஸ்ட் அனுப்புகிறோம். சுபம்.

தோ. வே. சென்னிசெட்டி அன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

## சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (துலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது மற்றும் வைத்தியர்களினால் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு முன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரிட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் கொண்ட மருந்தின்விலை ரூபா 1 சதம் 50. இம்மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y 47)

## புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரீஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னுடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரீஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமான பட்டுச்சேலைகளும் ஜரிகை நூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒரு தடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

Y. 39).

## சாலாமிஷ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஷ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமரன்சரக்கு, பிரஜ், சாலாமுஷ்லி, சப்பேமுதஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, கீர்முள்ளினிகை, நாகபஸ்பம், வங்கபஸ்பம், அப்ரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம் சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனுல் நீர்ழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலக்குடு, ஒருவருக்குத்தன் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் குதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் கோய்கள் நீர்த்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 6. அரைறூத்தலுக்கு ரூபா 4. கால் றூத்தலுக்கு ரூபா 2 தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினுங்கு முதலிய தொடுவாயிலாச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய ஔஷதாலயத்திபதிசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.